தெரியவருகிறது. அவைகள் எல்லாம் பாதுகாக்கப்படுகிற கோட்டைகளாக மாநில தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர்கீழ்தான் இருந்து வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதுபோல் துணைக் கேள்விகள் கேட்கக் கூடாது.

திரு. கு. காமாட்சி : திருச்சி-சென்னை பாதையில் மங்களமேடு என்ற இடத்தில் ஒரு கோட்டை இருக்கிறது. மிக அழகாக இருக்கிறது. அது எந்தத் துறையால் பாதுகாக்கப்படுகிறது என்பது இதுவரையில் தெரியவில்லை. அமைச்சர் அவர்கள்கூட அந்த இடத்திற்கு வந்திருக்கிறார்கள். அது இனி யாவது பாதுகாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக்குறிப்பு இல்லை. தனிக் கேள்விபோட்டால் விவரங்கள் அறிந்து கூறப்படும்.

தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்கள்

* 451. **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் நலத் துணை ஆணையாளர்கள் (D.C.L.) எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஆம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்போது டெப்டி கமிஷனர்ஸ் ஆப் லேபர் இம்மாநிலத்தில் மதுரை, கோவை ஆகிய இரண்டு இடங்களில் மட்டும்தான் இருக்கிறார்கள். அதிகமாகத் தொழில் தகராறு வரக்கூடிய இடங்களில் பொறுப்பை இவர்களுக்குக் கொடுக்கக்கூடிய முறையில் திருச்சி, சேலம் போன்ற இடங்களிலும் புதிதாக டெப்டி கமிஷனர்ஸ் ஆப் லேபர் நியமிக்கப்படு வார்களா ? எந்த எந்த இடங்களில் அவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக் கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஏற்கனவே சென்னை, மதுரை, கோவை ஆகிய வட்டாரங்களில் துணை ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுப் பணி யாற்றி வருகிறார்கள். தொழில் துறை அதிகாரிகள் மாநாட்டில் திருச்சி வட்டாரத்திலும் துணை ஆணையாளர் நியமிக்கப்படவேண்டுமென்று கோரப் பட்டது. அந்த மாநாட்டில் நான் கலந்துகொண்டு அதைப் பரிசீலனை செய்வ தாகச் சொல்லியிருக்கிறேன். இப்போது திருச்சியில் ஒரு துணை ஆணையாளரை நியமிக்க அரசு ஆவன செய்து வருகிறது.

திரு. மா. வே. நாராயணசாமி : தற்போதுள்ள டெப்டி கமிஷனர்ஸ் ஆப் லேபர், லேபர் ஆபீசர்கள் ஆகியோருக்குத் தொழில் தகராறுகளைத் தீர்க்கும் விஷயத்தில் வேலைப் பளு அதிகமாக இருப்பதால் இன்னும் சிறிது அதிகமான அளவிற்கு இந்தத் தொழிலாளர் நலத் துறை அலுவலர்களை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நிதிவசதிக்கு ஏற்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. எம். சுரேந்திரன் : தற்போதுள்ள தொழிலாளர் வழக்குகளில் ஈடு பட்டு அவற்றைத் தீர்ப்பதற்கு டெப்டி கமிஷனர்ஸ் ஆப் லேபர் போதுமான எண்ணிக்கையில் இல்லை என்று அரசுக்குத் திருப்தி ஏற்பட்ட காரணத்தினால் தான் அதை இன்னும் அதிகப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதைத்தான் ஏற்கனவே நான் தெரிவித்தேன். நிதிவசதி ஏற்பட்டதும் மாண்புமிகு உறுப்பினர் கருத்து நினைவிற்கொள்ளப்படும்.

திரு. த. சோனையா : தொழிலாளர் நலன் கருதி அமைக்கப்படுகிற துணை ஆணையாளர்கள் நகரங்களைப்பொறுத்து அதன் அடிப்படையில் அமைக்கப்படு கிறதா அல்லது ஆங்காங்குள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை அடிப்படை யில் அமைக்கப்படுகிறதா ? எந்த வகையில் கணக்கிடப்படுகிறது ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தொழிலாளர்கள் எவ்வளவு பேர் கள் இருக்கிறார்களோ அந்த விகிதத்திற்கேற்ப இது அமைக்கப்படுகிறது.

சென்னையிலுள்ள ஓட்டல் தொழிலாளர்கள்

* 452. வின—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா ?

சென்னை நகர ஓட்டல்களில் எட்டு மணி நேரந்தான் தொழிலாளர் பணி யாற்ற வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்துவதற்கு எடுத்துள்ள நடவடிக் கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இவ்வினா எழவில்லை. ஏனெனில் ஆறு நாட்கள் கொண்ட ஒரு வாரத்தில் வேலைநேரம் 48 மணி நேரத்துக்கு மேற் படக்கூடாது என்றிருந்த போதிலும் இளைஞர்களைதவிர ஏனைய தொழிலாளர் களுக்கான வேலை நேரம் நாள் ஒன்றுக்கு 9 மணி நேரத்துக்கு மேற்படக் கூடாது. நாள் ஒன்றுக்கான வேலை நேரம் 8 மணி நேரம் என்ற வீதத்தில் ஆறு